செ.வெ.எண்: 35 நாள்:15.09.2021

## பத்திரிக்கை செய்தி

இந்திய தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளின்படி, நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் உள்ள 06 சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டு அதன் பட்டியல் நாகப்பட்டினம் மாவட்ட அரசு வலைதள முகவரி www.nagapattinam.nic.in/election -ல் வெளியிடப்பட்டுள்ளது. தற்போது, 1500 வாக்காளர்களுக்கு மேல் உள்ள வாக்குச்சாவடிகளை பிரித்தல் / வாக்குச்சாவடி மையங்கள் வாக்காளர்கள் குடியிருப்பு பகுதியில் இருந்து 2 கி.மீ தூரத்திற்கு மேல் உள்ளவை /பழுதடைந்த கட்டிடங்களில் உள்ள வாக்குச்சாவடி மையங்களை வேறு கட்டிடத்திற்கு மாற்றம் செய்தல் மற்றும் இதர காரணங்களுக்காக வாக்குச்சாவடி மையங்களை பகுப்பது (Rationalization) தொடர்பான பணிகள் கடந்த 25.08.2021 முதல் நடைபெற்று வருகிறது. மேற்படி வாக்குச்சாவடி மைங்கள் குறித்த பட்டியல் பொது மக்களின் பார்வைக்காக மாவட்ட தேர்தல் அலுவலர் அலுவலகத்தில், சம்மந்தப்பட்ட வாக்காளர் பதிவு அலுவலர் / உதவி வாக்காளர் பதிவு அலுவலர் அலுவலகங்களில் வைக்கப்பட உள்ளது. இவ்வரைவு அறிக்கை தொடர்பாக பொதுமக்கள் தங்களது கூற்று மற்றும் ஆட்சேபணைகள் ஏதேனும் இருப்பின் 20.09.2021 - அன்று மாலை 05.00 மணிக்குள் எழுத்து மூலமாக சம்மந்தப்பட்ட வாக்காளர் பதிவு அலுவலர் / உதவி வாக்காளர் பதிவு அலுவலர் அல்லது மாவட்ட தேர்தல் அலுவலர் அலுவலகத்தில் தெரிவிக்கலாம். மேலும் பொது மக்கள் வரைவு அறிக்கையினை பின்வரும் நாகப்பட்டினம் மாவட்ட அரசு வலைதள முகவரி www.nagapattinam.nic.in/election -ல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என நாகப்பட்டினம் மாவட் தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர். அ. அருண் தம்புராஜ் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

| வ.எண் | சட்டமன்ற தொகுதி எண் மற்றும் பெயர் | வாக்குச்சாவடி மையங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 160.சீர்காழி | 288 |
| 2 | 161.மயிலாடுதுறை | 266 |
| 3 | 162.பூம்புகார் | 306 |
| 4 | 163.நாகப்பட்டினம் | 222 |
| 5 | 164.கீழ்வேளூர் | 203 |
| 6 | 165.வேதாரண்யம் | 227 |
| கூடுதல் | | 1512 |

மேற்கண்ட விவரப்படி, நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களிலுள்ள 06 சட்டமன்ற தொகுதிகளில் உள்ள 1512 வாக்குச்சாவடி மையங்களை பகுப்பாய்வு செய்யப்பட்ட விரைவு வாக்குச்சாவடி மையங்களின் பட்டியல் அரசியல் கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்களால் வெளியிடப்பட்டது.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**